# தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்.,
# மாவட்ட மேலாளர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம்
## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ந.க.எண். 0094/2019/சி.வி.3** நாள்:- 26.07.2019

**தலைமை அலுவலக கடித எண்:Q-6/10999/2018, நாள்: 26.07.2019**
(மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடத்தில் திண்பண்ட விற்பனை மற்றும் அன்றாடம் நுகர்வோர் விட்டுச் செல்லும் காலி பாட்டில்களை சேகரித்துக் கொள்ள **16.08.2019** முதல் **15.08.2021** வரை அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விவரம்)

மதுக்கூடங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்ப படிவம் **29.07.2019** முதல் **13.08.2019** வரை மட்டும் அனைத்து அலுவலக வேலை நேரத்தில் (சனிக்கிழமை உட்பட) வழங்கப்படும். விண்ணப்ப படிவம் பெற வேண்டிய கடைசி நாள் 13.08.2019, நேரம் நண்பகல் 12.00 மணி வரை விண்ணப்பப் படிவங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் விண்ணப்பதாரர் நேரில் அல்லது தபால் மூலமாக பெற மாவட்ட மேலாளர், **திண்டுக்கல்** மாவட்டம் தமிழ்நாடு மாநில வாணிப கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்ப்பதற்கான **கடைசி நாள் 13.08.2019 மதியம் 2.00 மணி வரை ஆகும்.**

- செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத்தொகை (**E.M.D**)
  மாநகராட்சி /நகராட்சி பகுதி ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)
  பேரூராட்சி அமைப்புகள் வாரியாக பகுதிகள் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)
  உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக பகுதிகள் ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)
- பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட மேலாளர் அலுவலக முகவரியில் நாள் **13.08.2019** பிற்பகல் **3.00** மணிக்கு திறக்கப்படும்.

**உள்ளாட்சி அமைப்புகளின் வாரியாக குறுமத் தொகை கணக்கிடுதல் மற்றும் ஒப்பந்தத்தாரர் தேர்வு செய்தல் சம்மந்தமான நிபந்தனைகள்:-**

(அ) மாநகராட்சி/நகராட்சிக்கு பகுதிகளில் உள்ள மதுபானக் கடையின் மாதாந்திர விற்பனையில் குறைந்தபட்சம் 1.80 சதவீதம் குறுமத்தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பேரூராட்சி பகுதிகளில் உள்ள மதுபானக் கடையின் மாதாந்திர விற்பனையில் குறைந்தபட்சம் 1.60 சதவீதம் குறுமத்தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(இ) ஊராட்சி பகுதிகளில் உள்ள மதுபானக் கடையின் மாதாந்திர விற்பனையில் குறைந்தபட்சம் 1.40 சதவீதம் குறுமத்தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் ரூ.525/– (GST உள்பட) வரைவோலை செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்களை
http://www.tenders.tn.gov.in
http://www.tasmac.co.in என்ற இணையதளத்தில் காணலாம் மற்றும் விண்ணப்பப் படிவத்தை இலவசமாக பதிவிறக்கிக் கொள்ளலாம்.

**மாவட்ட மேலாளர்**
**டாஸ்மாக் லிட். திண்டுக்கல்.**

(முழு முகவரியை தெரிவிக்க வேண்டும்)

விண்ணப்ப எண். [ ]

# மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலிபாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதி ஒப்பந்தப்புள்ளி தெரிவிக்கும் விண்ணப்பம்.

## விலை ரூ. 525/-

இண்டர்நெட் மூலம் விண்ணப்பிப்பவர்கள் ரூ.525/- க்கான திண்டுக்கல்லில் செலுத்தக்கூடிய வங்கி வரைவோலை இணைக்கவும்.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தக்காரரது பெயர் / முகவரி | |
| 2. | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் சம்பந்தமாக விபரம் | திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடை எண். ..................... உடன் இணைந்த மதுக்கூடத்தில் அன்றாடம் சேகரிக்கக்கூடிய காலி பாட்டில்களை எடுத்துக்கொள்ளல் மற்றும் மதுக்கூடத்தில் தின்பண்ட விற்பனை செய்து கொள்ளல். |
| 3. | பணி மேற்கொள்ளப்பட வேண்டிய மாவட்டத்தின் பெயர் | திண்டுக்கல். |
| 4. | மேற்படி மாவட்டத்தில் பணி மேற்கொள்ளப்பட தெரிவிக்கும் கடையின் விபரங்கள் | |
| | (a) கடை எண். | |
| | (b) முகவரி | |
| | (c) மாநகராட்சி – Spl, நகராட்சி – Sel. நகராட்சி (அல்லது) இதர பகுதிகள் | |
| 5. | ஒப்பந்தக்காரரது விபரம் (அரசுத்துறை/தனியார் போன்றவை) | |
| 6. | வேறு அரசுத்துறை / கழகம் / வாரியம் போன்றவற்றில் பணி மேற்கொண்டிருப்பின் அதன் விபரம் சான்றுகளுடன் | |
| 7. | செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகை விபரங்கள் (E.M.D.)<br>1. தொகை<br>2. வரைவோலை எண்/நாள்<br>3. தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் பெயர்.<br>4. கிளை | |

**மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலிபாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விபரம்**

| இனம் | மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதி கடைகளுக்கு உரிமம் பெற உத்தேசித்துள்ள தொகையை சதவிகிதத்தில் (சதவிகித முழு எண் மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் எண்கள் decimal-ல் குறிப்பிட வேண்டும் அவ்வாறு decimal –ல் குறிப்பிடும் எண்கள் இரண்டு இலக்கங்களுக்கு மேலாக இருக்கக்கூடாது. இதனை மீறி குறிப்பிட்டிருப்பின் அதற்கு மேல் உள்ள எண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.) |
|---|---|
| மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலிபாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை செய்து கொள்ளல். | சதவிகிதத்தில் மட்டும் குறிப்பிட வேண்டும்.<br>.....................% |

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை என்றும் உறுதி கூறுகிறேன். மேற்கூறிய தொகைக்கு அரசு நடைமுறையில் உள்ள விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் முதலியவற்றையும் தவறாது செலுத்த சம்மதிக்கிறேன்.

விண்ணப்பதாரரது கையொப்பம்

# பிற்சேர்க்கை
# தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்.,
# மாவட்ட மேலாளர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம்.

மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலிபாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் மற்றும் முகவரி | மாவட்ட மேலாளர்<br>தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், திண்டுக்கல் மாவட்டம், முள்ளிப்பாடி, திண்டுக்கல். |
| 2. | அ. ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் | திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனைக் கடை எண்.....................உடன் இணைந்த மதுக்கூடத்தில் அன்றாடம் சேகரிக்கப்பட்ட காலி பாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் மதுக்கூடத்தின் தின்பண்ட விற்பனை அனுமதி. |
| | ஆ. ஒப்பந்தம் செய்யப்படும் மாவட்டத்தின் பெயர் மற்றும் கடை எண்ணுடன் இணைந்த மதுக்கூடம். | திண்டுக்கல் மாவட்டம்.<br><br>கடை எண்...................உடன் இணைந்த மதுக்கூடம். |
| 3. | எந்த இடத்தில், எந்த தேதி வரை. | விண்ணபத்தின் விலை ரூ.525/- ரூபாய் ஐநூற்று இருபத்தைந்து மட்டும் (வரைவோலையாக மாவட்ட மேலாளர் டாஸ்மாக் லிட்., திண்டுக்கல் என்ற பெயரில் விண்ணப்பம் கிடைக்கக்கூடிய இடம்.<br>மாவட்ட மேலாளர் அலுவலகம்<br>தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்<br>முள்ளிப்பாடி, திண்டுக்கல்.<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>டெண்டர் விண்ணப்ப படிவம் விற்பனை செய்யப்படும் கடைசி நாள்.13-08-2019 பிற்பகல் 12-00 மணி வரை மட்டும் அனைத்து அலுவலக நேரத்திலும் (சனிக்கிழமை உட்பட) விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். |
| 4. | செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை(E.M.D.) | மாநகராட்சி, நகராட்சி பகுதி ரூ. 25,000/-, பேரூராட்சி அமைப்புகள் வாரியாக பகுதிகள் ரூ.10,000/- , உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக பகுதிகள் ரூ. 5,000/- |
| 5. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தகாரர்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளும் நேரமும் மற்றும் இடமும். | 13-08-2019 பிற்பகல் 2-00 மணி வரை ஞாயிற்றுக் கிழமை மற்றும் அரசு விடுமுறை தினங்கள் தவிர மற்ற அனைத்து நாட்களிலும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.<br>முகவரி:<br>**மாவட்ட மேலாளர்,**<br>**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்,**<br>**முள்ளிப்பாடி, திண்டுக்கல்.** |
| 6. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும், நாளும், நேரமும் | மாவட்ட மேலாளர் அலுவலகம்,<br>தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்,<br>முள்ளிப்பாடி, திண்டுக்கல்.<br>நாள். 13-08-2019 பிற்பகல். 03-00 மணிக்கு |
| 7. | ஒப்பந்த காலம் | உரிம காலம்- 16.08.2019 முதல் 15.08.2021 வரையிலான (02) வருட காலத்திற்கு (தற்காலிகமானது – மாறுதலுக்கு உட்பட்டது. மாவட்ட மேலாளர் முடிவே இறுதியானது.) |
| 8. | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என்று தீர்மானிக்கும் முக்கியத் தகவல் | முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாவட்ட மேலாளர் திண்டுக்கல்லின் முழு அதிகார வரம்பிற்குட்பட்டதாகும். |
| 9. | கடை எண். | |

மாவட்ட மேலாளர்

**மதுக்கூட நிபந்தனைகள்**

1. (அ). நிர்ணயிக்கப்படும் சதவீதத்தை (இந்த ஒப்பந்தப்புள்ளியைப் பொறுத்த வரை மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் செயல்படும் மதுபானக் கடைகளுக்கு மாதாந்திர விற்பனையில் 1.80 சதவீதம், பேரூராட்சிப் பகுதிகளில் செயல்படும் மதுபானக் கடைகளுக்கு மாதாந்திர விற்பனையில் 1.60 சதவீதம் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் செயல்படும் மதுபானக் கடைகளுக்கு மாதாந்திர விற்பனையில் 1.40 சதவீதம்) குறைந்தபட்ச சதவீதமாக வைத்து டெண்டர் முறையில் கடை வாரியாக அதிகபட்ச சதவீதம் கோருபவருக்கு மாவட்ட மேலாளரால் மதுக்கூட தின்பண்ட விற்பனை உரிமம் மற்றும் காலி பாட்டில் சேகரித்துக்கொள்ளும் உரிமம் அளிக்கப்படும்.

**2. உரிமத்தொகை**

**ஒப்பந்தம் ஏற்படுத்தி மதுக்கூட அனுமதி வழங்கும் முன்:**

**முன் அனுமதி கேட்புத் தொகை (Advance Demand Amount)**

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட மதுக்கூட ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்தில் குறிப்பிட்ட சதவீத எண்ணால் அந்த மதுக்கூடத்தோடு இணைந்த மதுக்கடையின் முந்தைய மாதம் (ஜூன் 2019-ம் மாத விற்பனைத் தொகை) விற்பனைத் தொகையைப் பெருக்கி, அவ்வாறு கிடைக்கும் தொகையே அம்மதுக்கூடத்தின் ஒரு மாத முன் அனுமதி கேட்புத் தொகை (Advance Demand Amount) ஆகும்.

(ஆ) மேற்கண்ட முன் அனுமதி கேட்புத் தொகையில், 99%-க்கான தொகை தனி கேட்புக் காசோலையாக (Demand Draft) SBI, Treasury Branch என்ற பெயரில் அரசுக் கணக்கில் செலுத்துவதற்காக மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அளிக்க வேண்டும். (GST and other taxes extra)

(இ) மேற்கண்ட (அ) முன் அனுமதி கேட்புத் தொகையில் 1%–க்கான தொகை தனி கேட்புக் காசோலையாக டாஸ்மாக் நிறுவனத்தின் பெயரில் (District Manager, TASMAC, Dindigul District என்ற பெயரில்) வழங்க வேண்டும்.

**காப்புத் தொகை (Security Deposit)**

(ஈ) மேற்கண்ட முன் அனுமதி கேட்புத்தொகையைப் போல் (2(அ)–வில் கண்ட) இரண்டு மடங்கு தொகை அல்லது அந்த மதுக்கூடத்தோடு இணைந்த மதுக்கடையின் கடந்த ஒரு வருட காலத்தில் எந்த மாத விற்பனை அதிகமாக உள்ளதோ அவற்றில் இரண்டு மடங்குத் தொகை (இவற்றில் எந்தத் தொகை அதிகமாக உள்ளதோ) அத்தொகையை காப்புத் தொகையாக வசூலிக்க வேண்டும். டாஸ்மாக் நிறுவனத்திற்கு தனி கேட்புக் காசோலையாக (Demand Draft) (District Manager, TASMAC, Dindigul District என்ற பெயரில்) செலுத்த வேண்டும். **காப்புத் தொகை முழுமையும் டாஸ்மாக் நிறுவனத்திற்கே செலுத்த வேண்டும்.**

**வித்தியாசத் தொகையை வசூல் செய்தல் / சரி செய்தல்:**

(உ) ஒவ்வொரு மாதமும் 5–ஆம் தேதிக்குள் முந்தைய மாத விற்பனையின் அடிப்படையில் அந்த மாதத்திற்கான சரியான கேட்புத் தொகை கணக்கீடு செய்து ஏற்கனவே வசூல் செய்த கேட்புத்

தொகையை விட இவ்வாறு கணக்கிடப்படும் கேட்புத் தொகை அதிகமாக இருப்பின், அந்த கூடுதல் வித்தியாசத் தொகை 5–ஆம் தேதிக்குள் பின்வருமாறு வசூல் செய்யப்படும். 99% SBI Treasury Branch என தனி கேட்பு காசோலையாகவும் (GST and other taxes extra), 1% District Manager, TASMAC என்ற பெயரிலும் வசூல் செய்யவும்.

(ஊ) மேற்கண்ட முறையில் கணக்கீடு செய்யப்படும் கேட்புத் தொகை (உ) ஏற்கனவே வசூல் செய்த கேட்புத் தொகையை விட குறைவாக இருப்பின், அந்த குறைவு வித்தியாசத் தொகை ஒவ்வொரு மாதமும் 5–ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டிய கேட்புத் தொகையில் (Demand) குறைத்து வசூல் செய்யப்படும்.

(எ) இந்த வழிமுறை அதன் பின் வரும் ஒவ்வொரு மாதமும் பின்பற்றப்படும் மதுக்கூட உரிமதாரர் மாதாந்திர கேட்புத் தொகையை அக்குறிப்பிட்ட மாதத்தின் 5–ம் தேதிக்குள் செலுத்தத் தவறினால் மதுக்கூடம் நடத்த அனுமதி மறுக்கப்படும். மேலும் நிலுவையிலுள்ள தொகை மற்றும் அதன்மீது ஆண்டொன்றுக்கு 12% வட்டி கணக்கிட்டு வசூல் செய்தப் பின்னரே மீண்டும் அனுமதி அந்த மதுக்கூடத்தை தொடர்ந்து நடத்த ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும்.

(ஏ) தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத்தொகை அவர் செலுத்த வேண்டிய காப்புத் தொகைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். ஒப்பந்த புள்ளியில் தேர்ந்தெடுக்கப்படாத நபர்களின் பிணை வைப்புத்தொகை ஒப்பந்த புள்ளி வேலைகள் முடிந்த பின் திருப்பித்தரப்படும்.

3. (அ) இரண்டு மாத உரிமத் தொகையை காப்புத் தொகையாக ஒப்பந்ததாரர் டிமாண்ட் டிராப்ட் மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். இது தவிர ஒவ்வொரு மாதத்திற்கான தொகையை மாத ஆரம்பத்தில் செலுத்தி உரிமத்தை மாதந்தோறும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். காப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை (குறிப்பிட்ட காரணங்களுக்காக பறிமுதல் செய்யப்பட்டால் தவிர) இரண்டு வருடம் கழித்து திருப்பித் தரப்படும். இக்குறிப்பிட்ட காலத்தில் காப்புத் தொகையை சரிசெய்யக்கூடாது (should not be adjusted). காப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.

(ஆ) **வங்கி வரைவோலைகளின் எண்ணிக்கை – காப்புத் தொகை / முன் அனுமதி**

**காப்புத் தொகையானது** ஒரே வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும். அதைத் தவிர ஒரு மாதத்திற்கான **முன் அனுமதி கேட்புத் தொகையை** அரசு கணக்கில் செலுத்திட ஒரு வங்கி வலைவோலை (டிமாண்ட் டிராப்ட்) (99%) தொண்ணூறு ஒன்பது சதவீத தொகைக்கும் (SBI Treasury Branch என்ற பெயரிலும்) மற்றொரு வங்கி வரைவோலை (1%) ஒரு சதவீதத்திற்கும் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்திட வேண்டும். ஆக மொத்தம் புது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்படும் வங்கி வரைவோலை எண்ணிக்கை **மூன்று மட்டுமே** இருத்தல் வேண்டும். அதைப்போலவே இரண்டாவது மாதம் முதல் மாதா மாதம் வழங்க வேண்டிய வங்கி வரைவோலைகள் (கேட்புத் தொகைக்கானவை) இரண்டு மட்டுமே இருத்தல் வேண்டும். நிபந்தனை (ஈ (1))–ல் கண்ட **கேட்புத் தொகையில் கூடுதல் வித்தியாசத் தொகைக்கு** அதில் தெரிவித்துள்ளது போல் தனித் தனியாக 2 வரைவோலைகள் (Demand drafts) வழங்க வேண்டும்.

4. ஒப்பந்ததாரர் அளிக்கும் ஒப்பந்தப் புள்ளி நிபந்தனையற்றதாக இருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பம் மற்றும் மதுக்கூடங்களில் நுகர்வோர் அன்றாடம்விட்டுச்செல்லும் காலி பாட்டில்களை சேகரித்துக் கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை உரிமம் போன்ற ஆவணங்கள் அனைத்திலும் ஒப்பந்ததாரரின் கையொப்பமிட்ட மார்பளவு புகைப்படம் அளிக்கப்படவேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்கு முன் ஒப்பந்ததாரர் மதுக்கடையின்சுற்றுப்புறத்தை பார்வையிடலாம்.ஒப்பந்தப் புள்ளி கொடுத்தப்பின் அதை மாற்றவோ திரும்பப் பெறவோ முடியாது.

7. 15 நாட்கள் முன்னறிவிப்பு கொடுத்து இந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வர டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு.

8. அதிகபட்ச கேட்பு சதவீதம் கோருபவருக்கு மாவட்ட மேலாளரால், மதுக்கூட தின்பண்ட விற்பனை உரிமம் மற்றும் காலி பாட்டில் சேகரித்துக்கொள்ளும் உரிமம் அளிக்கப்படும்.

9. (அ) மதுக்கூடத்தின் அனுமதிக் கட்டணம் (குறுமத்தொகை), பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும். மதுக்கூடங்களில் ஒப்பந்ததாரர் தான் நுகர்வோருக்கு அளிக்கும் வசதிகளுக்காக (உதாரணமாக குளிர்சாதன வசதி) தனியே சேவைக் கட்டணம் வசூலிக்க விரும்பினால் அதற்கென டாஸ்மாக் நிறுவத்தின் முன் அனுமதி பெறவேண்டும். அப்படிப்பட்ட இனங்களில் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் கூடுதல் சிறப்புக் கட்டணத்தை ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும்.

(ஆ) மேற்படி நுகர்வோரிடம் வசூலிக்கும் சேவைக் கட்டணத்திற்கான உரிய ரசீதுகள்

ஒப்பந்ததாரரால் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அது குறித்த கணக்கு விபரங்களையும் டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும். மேற்படி சேவைக் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அரசுக்கு செலுத்த வேண்டிய (GST) வரிகள் ஏதுமிருப்பின் அவற்றையும் ஒப்பந்தத்தாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. ஒப்பந்ததாரர் வருமான வரி செலுத்துபவராயின், டாஸ்மாக் நிறுவனத்தின் மதுக்கூட உரிமம் பெற்று செயல்பட்ட காலத்திற்கு தொடர்புடைய தனது வருமான வரி விபரங்களை வருமான வரித் துறைக்கு சமர்ப்பித்திருந்தால் அதன் விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும்.

11. மேற்படி உரிம நகல் மதுக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

12. முன்னாள் தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு உரிமம் பெற்றவருக்கு அவரது கடந்த கால செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு உரிமம் வழங்க முடிவு செய்யப்படும்.

13. நிர்வாக காரணங்களை ஒட்டி மதுக்கடையை மூட வேண்டியிருந்தாலோ அல்லது வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருந்தாலோ ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு புதிய ஒப்பந்தப்புள்ளி பெறப்படும். மதுக்கடையோ/மதுக்கூடமோ மூடப்பட்டால், அதற்கு ஒப்பந்ததாரர் எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

14. அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படின் இந்த ஒப்பந்தம் தானாகவே முடிவுறும். அவ்வாறு முடிப்பதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு காரணம் தெரிவிக்க வேண்டியதில்லை. முன் அறிவிப்பும் கொடுக்க வேண்டியதில்லை. அரசு கொள்கையால் டாஸ்மாக் தமிழ்நாடு மாநில வாணிப கழகம்) மதுக்கடையோ/மதுக்கூடமோ மூடப்பட்டால், அதற்கு ஒப்பந்ததாரர் எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

15. ஒப்பந்ததாரர் மதுக்கூடத்தில் நியமிக்கும் தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் தமிழ்நாடு மாநில வாணிப கழகம் பொறுப்பல்ல. ஒப்பந்ததாரர் நியமிக்கும் தொழிலாளர்களுக்கும், டாஸ்மாக் நிறுவனத்திற்கும் இடையில் தொழிலாளி முதலாளி உறவு கிடையாது.

16. மாதாந்திர கேட்புத் தொகை மதுபானக் கடையின் மாதாந்திர விற்பனைக்கேற்ப (based on actual sale) மாறுபடும்.

17. ஒப்பந்ததாரர் தண்ணீர், அனுமதிக்கப்பட்ட குளிர் பானங்கள், சுண்டல், அவித்த மற்றும் வறுத்த பயிறு வகைகள், முட்டை, மீன், மற்றும் இறைச்சி பண்டங்கள் ஆகியவற்றை நியாயமான விலைக்கு மட்டுமே விற்க அனுமதியுண்டு. வெளியில் சமைத்த தின்பண்டங்களை மட்டுமே விற்க அனுமதிக்கப்படும். மேலும் அரசிற்கு செலுத்தப்பட வேண்டிய GST மற்றும் பிற வரிகள் முறையாக செலுத்தி அதற்குரிய அறிக்கைகள் (returns under CGST Act. 2017 / TNGST Act 2017.) அரசிற்கு தாக்கல் செய்ய வேண்டும் அவ்வாறு முறையாகச் செலுத்தியதற்கான சான்றுகளை உரிய காலத்தில் உடனுக்குடன் டாஸ்மாக் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத்தவறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

18. மதுக்கூடங்களில் அடுப்பு வைத்து சமைத்தல் கூடாது. மதுக்கூடத்தில் அடுப்பு இருக்கக் கூடாது.

19. மின்கட்டணம், தண்ணீர் வசதி மற்றும் இடவசதி போன்ற அனைத்து செலவுகளையும் ஒப்பந்தத்தாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

20. எக்காரணம் கொண்டும் பிராணிகளையோ, பறவைகளையோ உயிருடன் மது கூடத்திற்கு எடுத்து வருவதோ, இருப்பு வைப்பதோ அனுமதிக்கப்படமாட்டாது.

21. அதேபோன்று மேற்படி விலங்குகளை/பறவைகளை மதுக்கூடத்தில் வைத்து கொல்வதோ அல்லது சமைப்பதோ அனுமதிக்கப்பட மாட்டாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

22. மேற்படி உரிமம் மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பதற்கும், காலிபாட்டில்களை சேகரித்துக்கொள்ள மட்டுமே. மற்றபடி மதுக்கூடம் டாஸ்மாக் நிறுவனத்தின் முழு கட்டுபாட்டில் இருக்கும். டாஸ்மாக் நிறுவனம் நியமிக்கும் பணியாளர் இந்த மதுக்கூட அனைத்து செயல்பாடுகளையும் கண்காணிப்பார். மதுக்கூடத்தின் சாவியும் டாஸ்மாக்கிடமே இருக்க வேண்டும்.

23. ஒப்பந்தப் புள்ளி கொடுத்தப்பின் அதை மாற்றினாலோ அல்லது திரும்பப் பெற்றாலோ, பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

24. வாடிக்கையாளர் எந்தவித வற்புறுத்தலுமின்றி மேற்படி மதுக்கூடத்தில் தானே விட்டுச் செல்லும் காலி பாட்டிலை மட்டுமே மேற்படி ஒப்பந்ததாரர் சேகரிக்க வேண்டும். வாடிக்கையாளர் மது பாட்டிலை எடுத்துச் சென்றால் எக்காரணம் கொண்டும் காலி பாட்டில்களை திருப்பி தரும்படி வலியுறுத்தக்கூடாது.

25. காலி பாட்டில்களை உடனுக்குடன் சேகரித்து அப்புறப்படுத்தி விட வேண்டும் எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் மதுக்கூடத்தில் காலி பாட்டில் சேகரித்து வைக்கக்கூடாது. தவறும் பட்சத்தில் காலி பாட்டில்களை டாஸ்மாக் மதுக்கூடங்களில் இருப்பு வைக்கும் நேரத்திற்காக மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூலிக்க டாஸ்மாக் நிறுவனத்திற்கு உரிமையுண்டு. ஒப்பந்ததாரர் காலி பாட்டில்களை குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒரு முறையாவது அப்புறப்படுத்திட வேண்டும்.

26. மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில், தின்பண்டம் விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரம் செய்துக் கொள்ளும் உரிமம் பெற்றவர்கள் ஏனைய மதுக்கூடத்தில் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள் யாருக்கு விற்பனை செய்கிறார்கள், ஒவ்வொரு முறையும் எவ்வளவு காலி பாட்டில்கள் விற்பனை செய்கிறார்கள், காலி பாட்டில்கள் வாங்கியவர்கள் எங்கே எடுத்து செல்கிறார்கள் போன்ற விவரங்களை தனியாக ஒரு பதிவேட்டில் குறித்து வைத்திருக்க வேண்டும்.

27. சேகரிக்கும் காலி பாட்டில்கள் யாருக்கு ஒப்பந்ததாரர் விற்கிறார் என்பதற்கான விவரங்களை முகவரியுடன் கூடிய முழு விபரங்களும் அவ்வப்போது மாவட்ட மேலாளருக்கு அளிக்க வேண்டும்.

28. காலி பாட்டில் சேகரிப்பதற்கும் தின்பண்ட விற்பனைக்கும் தேவையான உரிய ஏற்பாடுகளையும், பணியாளர்களையும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பேற்றுச் செய்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் பணியாளர்களை இதில் ஈடுபடுத்தக் கூடாது. இவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்கள் மதுபாட்டில்களை கையாளக் கூடாது. காலி பாட்டில்கள் சேகரிப்பு மற்றும் தின்பண்டங்கள் விற்பது மட்டுமே அவரது பணியாக இருத்தல் வேண்டும். இப்பணியில் ஈடுபடுத்தப்படுபவர்கள் குழந்தை ஊழியர்களாக இருத்தல் கூடாது. 21 வயது முதிர்வடைந்த ஆண்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.

29. மதுக்கூடங்களில் ஆபாச படமோ, எழுத்தோ, காட்சிகளோ இருக்கக்கூடாது.

30. (அ) மதுக்கூடத்தினை பொழுதுபோக்கு இடமாகவோ, சூதாடும் இடமாகவோ, ஒப்பந்ததாரர் பயன்படுத்தக் கூடாது.

(ஆ) மதுக்கூடத்தில் சூதாடுதல், பொழுது போக்கு கேளிக்கைகள் நடவாவண்ணம் பார்ப்பது ஒப்பந்ததாரர் கடமை.

31. (அ) மதுக்கூடத்தின் சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

வாடிக்கையாளரால் விட்டுச் செல்லப்படும் உணவு கழிவுகள், காலி டம்ளர்கள் போன்ற இனங்கள் ஒப்பந்ததாரரின் பணியாளரால் உடனுக்குடன் நீக்கப்பட்டு

மதுக்கூடம் சுத்தம் செய்யப்படுவதும், குப்பைகளை அகற்றுவதும் ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

(ஆ) மதுக்கூடத்தில் எந்தவிதமான அசுத்தம் இல்லாமல், அவ்வப்போது அப்புறப்படுத்திட வேண்டும்.

32. மதுக்கூடத்தில் போதிய மின்விளக்குகள் பொருத்தி தேவையான வெளிச்சம் இருக்கும் வகையில் மதுக்கூடம் அமைந்திட வேண்டும்.

33. மதுக்கூடத்தில் கழிப்பிட வசதி கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.

34. மதுக்கூடத்தில் துப்புரவு பணியாளர்களை நியமித்து, கழிப்பிடம் தூய்மையாக பராமரித்திட வேண்டும்.

35. டாஸ்மாக் கடைகளின் வேலை நேரத்தை ஒட்டியே மதுக்கூடங்களின் வேலை நேரம் அமையும். வேலை நேரம் நண்பகல் 12.00 மணி முதல் இரவு 10.00 வரை ஆகும். அந்த வேலை நேரத்தின்போது மட்டுமே ஒப்பந்ததாரருக்கு/அவரது பணியாளருக்கு மதுக்கூடத்தில் அனுமதியளிக்கப்படும். டாஸ்மாக் கடையின் விடுமுறை நாட்களிலோ அல்லது வேலை நேரத்திற்கு அப்பாற்பட்டோ மதுக்கூடத்தினை திறந்திருந்தால் உடனடியாக இந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்படும். மேலும் பிணைத் தொகையை திரும்பப் பெற இயலாது.

36. தின்பண்ட உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் தான் விற்பனை செய்யும் தின்பண்டங்களுக்கான <u>உரிய விலைப்பட்டியலை பார்வைக்கு</u> வைப்பதுடன் தின்பண்டங்கள் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டதாகவும், சுத்தமாக பராமரிக்கப்பட்டதாகவும் அது தொடர்பான அரசின் அத்தனை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டனவாகவும் இருத்தல் அவசியம். இந்த தின்பண்ட பொருள்கள் (FSSAI) உணவு பொருள் தரக்கட்டுபாடு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

37. தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு தொடர்பான கணக்குவழக்குகளை டாஸ்மாக் நிர்வாகம் கோரினால் அந்த விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு உடன் அளிப்பது உரிமதாரரின் கடமையாகும்.

38. மதுக்கூடத்தில் அரசால் தடை செய்யப்பட்ட எந்த பொருளும் விற்கக் கூடாது. மேலும் பீடி, சிகெரெட் போன்றவை விற்க கூடாது.

39. குளிர்பானங்கள், குடிநீர் ஆகியவற்றில் ISI தரச் சான்று பெற்றவையே பயன்படுத்த வேண்டும்.

40. மதுக்கூடத்தில் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருள்களை வைக்கக்கூடாது மதுக்கூடத்தில், சுவற்றிலே கீற்றுக் கொட்டகை போன்றவை பயன்படுத்தல் கூடாது.

41. அரசு அல்லது டாஸ்மாக் நிறுவனம் அவ்வப்போது விதிக்கும் இதர கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள், விதிகள் போன்றவற்றிக்கு முழுதும் ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும்.

42. அரசின் பிற துறைகள் இது தொடர்பாக ஏற்கனவே விதித்துள்ள (அல்லது) விதிக்கும் அனைத்து சட்ட திட்டங்களும் ஒப்பந்ததாரரை கட்டுப்படுத்தும்.

43. அதேபோல் ஆய்வுக்கு வரும் டாஸ்மாக் அலுவலர்களுக்கு அவர்களது ஆய்வின்போது போதிய ஒத்துழைப்பினை ஒப்பந்ததாரர் அளிக்க வேண்டும். டாஸ்மாக் நியமிக்கும் பல்வேறு ஆய்வுக் குழுக்கள் எந்நேரமும் மதுக்கூடங்களை ஆய்வு செய்திட முழு உரிமை உண்டு.

44. திண்பண்ட விற்பனை தவிர மதுக்கூடத்திற்குள் தனியே மதுபானம் விற்பதோ, இருப்பு வைப்பதோ கூடாது. அவ்வாறு மது விற்பது கண்டுபிடிக்கப்பட்டால் ஒப்பந்தம் இரத்து செய்யப்படும்.

45. தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு உரிமம் பெற்றவர் மத்திய/மாநில அரசுகளால் அவ்வப்பொழுது அமுல்படுத்தப்படும் மத்திய/மாநில வரிகளை, உதாரணமாக, **சரக்கு மற்றும் சேவை வரி (GST)**, வருமான வரி (TDS, TCS, etc.) சுங்கவரி மற்றும் பிற வரிகள் அல்லது கட்டணங்கள், உரிமக் கட்டணத்திற்கு மேலாக செலுத்த வேண்டும். மேலும், அரசுத் துறை நிதி நிறுவனங்கள்/ஆணையங்களோடு சட்டப்படி பதிவு செய்ய வேண்டுமாயின் அதற்கும் ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும் அதற்கு அவரே முழு பொறுப்பாவார். இவைகளைத் தவிர, பணியாளர் சேமநலநிதி ஆணையம் (EPF Act) மற்றும் பணியாளர் காப்பீட்டுக் கழகத்தால் (ESIC) ஆணைகள் ஏதாவது பிறப்பிக்கப்பட்டால், அதற்கும் ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும். அதற்கு அவரே முழு பொறுப்பாவார்.

46. ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலோ, முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டாலோ உரிய விசாரணைக்கு பின்னர் உரிமம் ரத்து செய்யப்படுவது மட்டுமின்றி முன் வைப்புத்தொகையை டாஸ்மாக் நிறுவனமே தக்க வைத்துக்கொள்ளவும், டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமையும் உண்டு.

47. உரிமம் காலம் இரண்டாண்டு காலமாகும். இது முற்றிலும் ஒரு தற்காலிகமான அனுமதி மட்டுமே. ஒவ்வொரு மாதமும் ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் மாவட்ட மேலாளரால் கூர்ந்து ஆய்வு செய்யப்படும். உரிமத் தொகையை ஒவ்வொரு மாதமும் நிபந்தனையின்படி செலுத்த தவறினால், உரிமம் புதுப்பிக்கப்பட மாட்டாது. மேலும் ஒப்பந்தக் காலத்திற்குள் ஒப்பந்ததாரர் உரிமத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறி அதனால் உரிமம் ரத்து செய்யும் பட்சத்தில், மற்றொரு ஒப்பந்தப்புள்ளி கோரி பின்னர் தேர்வு செய்யும் புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் வரை ஏற்படக்கூடிய நஷ்டத்தையும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் செலவினையும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் கணக்கிட்டு வசூலிக்கப்படும்.

48. மேற்படி உரிமத்தை ஒப்பந்ததாரர் வேறு எவருக்கும் மாற்றி தரக்கூடாது. இவ் விற்பனையை டாஸ்மாக் அனுமதி பெறாத வெளி நபர் கண்காணிக்கவும் அனுமதிக்க கூடாது.

49. ஒப்பந்ததாரர் நியமிக்கும் பணியாளர்களின் நன்னடத்தைக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். அவரது பணியாளர்கள் சண்டைச் சச்சரவுகளில் ஈடுபடுவதோ டாஸ்மாக் நிறுவனத்தின் சொத்துக்களுக்கு இழப்பு ஏற்படும் வகையில் நடந்து கொள்வதோ அனுமதிக்கப்பட மாட்டாது. தவறும் பட்சத்தில் மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் இழப்புத் தொகையினை ஒப்பந்ததாரர் வரைவுக்காசோலை மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். இவ்விஷயத்தில் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் இழப்புத் தொகையே இறுதியானது.

50. எந்தவித சிக்கலும் இல்லாமல் சுமூகமாக ஒப்பந்ததாரர் ஒப்பந்த இறுதி காலம் வரை செயல்பட்டால் மாத்திரமே காப்பீட்டுத் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

51. மதுக்கூடம் சம்பந்தமாக கலப்பட தடுப்புச் சட்டம், தொழிலாளர் நல சட்டங்கள் மற்றும் இதர சட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். எந்த வகையிலாவது மேற்கண்ட சட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையால் டாஸ்மாக் நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டால் அதனை முழுவதுமாக ஒப்பந்ததாரர் ஈடுகட்ட வேண்டும்.

52. இந்த நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் மீறினால் காப்பீட்டுத் தொகையிலிருந்து இழப்பீட்டு தொகை சரி செய்யப்படுவது உடன் ஒப்பந்தத்தையும்/உரிமத்தையும் டாஸ்மாக் நிறுவனம் ரத்து செய்ய உரிமையுண்டு.

53. இந்த நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் மீறினால், அதனால் டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பினை மாவட்ட மேலாளர் கணக்கிட்டு வசூலிக்க நடவடிக்கை எடுப்பார். அவரது முடிவு இறுதியானது. அவர் கூறும் தொகையை ஒப்பந்ததாரர் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். தவறினால் அந்தத் தொகையை ஒப்பந்ததாரரின் காப்பீட்டு தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.

54. காலி பாட்டில் சேகரிப்பதிலோ, தின்பண்டங்கள் விற்பதிலோ அல்லது மதுக்கூட செயல்பாடு சம்பந்தமாக ஏற்படும் சட்ட சிக்கல்கள் மற்றும் வழக்குகளையும் ஒப்பந்ததாரரே எதிர்கொள்ள வேண்டுமேயொழிய டாஸ்மாக் நிறுவனத்தை தொடர்புபடுத்த இயலாது.

55. ஒப்பந்ததாரருக்கும் டாஸ்மாக் நிறுவனத்திருக்கும் இடையில் வழக்கு ஏற்பட்டால் அந்த வழக்கு <u>1996–ம் ஆண்டின் Arbitration and Conciliation Act–ன்</u> கீழ் தீர்த்துக் கொள்ளலாம்.

56. வேறுவழக்கு ஏதாவது எழுந்தால் சம்மந்தப்பட்ட மாவட்ட எல்லைக்குட்பட்ட நீதிமன்றத்தில்தான் வழக்கு தொடர வேண்டும்.

57. ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நபரோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ அல்லது அவரது உறவினர்களோ முன்னதாக தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரம் செய்துகொள்ள உரிமம் பெற்று அதில் ஏதேனும் தொகை நிலுவையில் இருந்தாலோ அல்லது தவறான செயல்களில் ஈடுபட்டிருந்தாலோ அந்த நபரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

58. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஒப்பந்ததாரர்கள் இருப்பிட சான்று அல்லது குடும்ப அட்டை நகல் அல்லது ஆதார் அட்டை நகல், வாக்காளர் அட்டையாளஅட்டை நகல் மற்றும் வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டையின் நகல் (PAN CARD NO) ஆகியவற்றை தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

59. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் மத்திய சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், 2017/தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டடம், 2017–ன் கீழ் பதிவு செய்து GSTIN பதிவு எண் (Goods and Service Tax Identification Number) பெற்றவராக இருக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் பட்சத்தில், GSTIN சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேற்கண்ட பதிவு சான்று சமர்ப்பித்தால் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்படும்.

60. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் உணவு பாதுகாப்பு மற்றும் தர கட்டுப்பாடு அலுவலரின் (FSSAI) சான்றிதழ் பெற்று ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

61. ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பதாரர்களில் அப்போது ஆஜரில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் மாவட்ட மேலாளர் அவர்களால், திண்டுக்கல் மாவட்டம் டாஸ்மாக் அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்கள் 13-08-2019 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கப்பட்டு, மதுபான கடைகளின் வரிசை எண் வாரியாக ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் அடங்கிய கவர்கள் திறக்கப்படும்.

62. அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் எந்த

வித காரணங்கள் கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரம் உள்ளது.

63. தமிழக அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஒரு முறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய மக்காத, மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்களை மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்துள்ள மதுக்கூடங்களில் பயன்பாட்டில் இருக்கக்கூடாது. பயன்பாட்டில் இருப்பது கண்டறியப்படும்பட்சத்தில் மதுக்கூடம் உரிமம் இரத்து செய்யப்படும்.

64. மதுக்கூட கட்டிடத்தின் நிலைத் தன்மை குறித்தான சான்று (Stability Certificate) பெற்று ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

65. மோசடிக்கு எதிரான விதித்தொகுப்பை கடைப்பிடித்தல் (Complying with anti-fraud code of TASMAC) மதுக்கூட ஒப்பந்ததாரர் டாஸ்மாக்கின் விதித் தொகுப்பான மோசடிகளைத் தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல் 2014–ல் குறிப்பிட்டுள்ள விதிகளை நிபந்தனையற்ற முறையில் கடைப்பிடிக்க உடன்பட வேண்டும் மற்றும் அவரோ அவரின் நிறுவனத்தில் பணிபுரிபவர்களோ மற்றும் டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரிபவர்களையோ மோசடி செயல்களில் ஈடுபடுத்தக்கூடாது. மேலும் அவ்வாறு மோசடி செயல்கள் அல்லது சந்தேகத்திற்கிடமான மோசடி செயல்கள் அவரின் பார்வைக்கு தெரிய வந்தால் உடனடியாக டாஸ்மாக் நிறுவனத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டமைக்கு சான்றாக ஒப்பந்த நிபந்தனைகளின் அனைத்துப் பக்கங்களிலும் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்..